**மதுக்கரை நகராட்சியில் 31.03.2022ம் நாள் நடைபெற்ற சாதாரண மன்றக்கூட்டத்தின் தீர்மானம் நகல்கள்.**

**மன்றப் பொருள் எண்.1**

அரசாணை (நிலை) எண்:116 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை, நாள்: 07.12.2021ன் படி கோயம்புத்தூர் மாவட்டம் மதுக்கரை பேரூராட்சியை நகராட்சியாக அறிவித்து (Declared as Municipality) ஆணையிடப்பட்டது. மேற்கண்ட ஆணையின்படி தமிழ்நாடு அரசிதழின் சிறப்பிதழில் 07.12.2021ம் நாளில் அறிவிக்கைகள் ஆங்கிலத்தில் வெளியிடப்பட்டது.

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண் 20782/2021/மாந. அ1, நாள்: 09.12.2021ன் படி, மதுக்கரை சிறப்புநிலை பேரூராட்சியை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டதைத் தொடர்ந்து மதுக்கரை நகராட்சி திருப்பூர் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அலுவலக கட்டுப்பாட்டின் கீழ் செயல்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க எண். 20782/2021/மாந.அ1, நாள்.13.12.2021 ன் படி பேரூராட்சியில் பணியாற்றிய செயல் அலுவலர்கள் பணியிடங்களுடன் தாய்துறையான பேரூராட்சிகளின் ஆணையரகத்திற்கு ஒப்படைக்கப்படுகிறார்கள் எனவும் செயல் அலுவலர்கள் தவிர மற்ற அனைத்துப் பணியாளர்களும் நகராட்சி அறிவிப்பு வரப்பெற்றவுடன் நகராட்சி பணியாளர்களாகவே கருதப்படுவார்கள் எனவும், தரம் உயர்த்தப்பட்ட நகராட்சிகளில் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920ல் அத்தியாயம் III, பிரிவு 6ன்படி நகராட்சி ஆணையர்கள் அரசினால் பணியமர்த்தப்படுவார்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட விபரத்தினை அரசு ஆணை மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் அறிவுரைகளுக்கிணங்க கோயம்புத்தூர் மாவட்டம் மதுக்கரை சிறப்புநிலை பேரூராட்சியை மதுக்கரை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு அதன் நிர்வாக பணிக்கு ஆணையாளர் நியமிக்கப்பட்டு செயல்படுத்தியமைக்காக தமிழக அரசுக்கு மதுக்கரை நகராட்சி மக்களின் சார்பாக மனமார்ந்த நன்றியை தெரிவிக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

( ந.க எண்.1674/2021அ1)

**அலுவலக குறிப்பு**

பொதுமக்களின் நலன்கருதி மதுக்கரை சிறப்புநிலை பேரூராட்சியை மதுக்கரை நகராட்சியாக தரம் உயர்த்தி செயல்படுத்திய தமிழக அரசுக்கு நகர் மன்றத்தின் சார்பாக நன்றி தெரிவிக்கலாம்.

**தீர்மானம் எண்.7**

மாண்புமிகு தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்களுக்கு நன்றி தெரிவிக்கப்பட்டது.

---

## மன்றப் பொருள் எண்.2

கோயம்புத்தூர் மாவட்டம், மதுக்கரை ஏசிசி லிட் சிமெண்ட் தொழிற்சாலை நிறுவனத்தாரின் 22.03.2022ம் நாளிட்ட கடிதத்தில் தெரிவித்துள்ளபடி மேற்கண்ட நிறுவனத்தின் மூலம் கீழ்காணும் இடங்களில் CSR நிதி மூலம் சொத்தாக்கம் செய்யப்பட்டுள்ளதை நகராட்சியின் சொத்தாக்கத்திற்கும் பொது பயன்பாட்டிகும் ஒப்படைத்துள்ளார்கள்.

| வரிசை எண் | சொத்து விபரம் | மதிப்பீடு ரூபாய் |
|---|---|---|
| 1 | 10வது வார்டு அறிஞர் அண்ணா நகரில் புதிதாக கட்டப்பட்டுள்ள பொதுக்கழிப்பறை | ரூ.6.00 லட்சம் |
| 2 | 13வது வார்டு தண்டபாணி தோட்டம் பகுதியில் புதிதாக கட்டப்பட்டுள்ள பொதுக்கழிப்பறை | ரூ.6.00 லட்சம் |
| 3 | 4வது வார்டு அறிவொளி நகரில் உள்ள கழிப்பறை புதுப்பித்தல் செய்யப்பட்டது. | ரூ.2.50 லட்சம் |
| 4 | 27வது வார்டு அட்லாண்டிக் நகரில் புதிதாக நியாயவிலைக்கடை கட்டப்பட்டது | ரூ.7.00 லட்சம் |
| | **மொத்தம்** | ரூ.21.50 லட்சம் |

மேற்காணும் விபரத்திற்கு இந்நகராட்சியின் நான்கு வார்டுகளிலும் ஏசிசி நிறுவனத்தார்கள் மூலம் நிறுவப்பட்டுள்ள சொத்தின் மொத்த மதிப்பு ரூ.21.50 லட்சம் ஆகும். இவ்விடங்களில் நகராட்சி மூலம் மின் இணைப்பு பெறலாம். அதற்கான உத்தேச செலவு ரூ.20000/—ஐ நகராட்சி நிதியிலிருந்து மேற்கொள்ளலாம். ஏசிசி நிறுவனத்தார் பொதுமக்கள் பயன்பாட்டிற்காக தங்களின் CSR நிதியிலிருந்து ரூ.21.50 லட்சம் செலவினம் மேற்கொண்டமைக்கு ஏசிசி நிறுவனத்திற்கு இந்நகராட்சி பொதுமக்கள் சார்பாக நகர் மன்றத்தின் வாயிலாக மனமார்ந்த நன்றியை தெரிவிக்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

(ந.க.எண்.375/2022/அ1)

**<u>அலுவலக குறிப்பு</u>**

ஏசிசி நிறுவனத்தார் மூலம் மதுக்கரை நகராட்சி மக்களுக்கு அத்தியாவசிய தேவையின் அடிப்படையில் CSR நிதி ரூ.21.50 லட்சம் நிதியுதவி வழங்கியதற்கு மன்றத்தின் மூலம் ஏசிசி நிறுவனத்திற்கு மனமார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்ளலாம்.

**<u>தீர்மானம் எண்.8</u>**

மதுக்கரை ஏசிசி நிறுவனத்திற்கு நன்றி தெரிவிக்கப்பட்டது.

---

## மன்றப் பொருள் எண்.3

1920ம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் பிரிவு 120ன்படி வரவு – செலவுத் திட்டங்கள் (Budget Estimate) நகராட்சி மன்றம் ஒவ்வொரு ஆண்டிலும் நிகழக்கூடிய வரவுகள் மற்றும் செலவுகள் காட்டும் வரவு செலவுத்திட்டம் தயாரித்து மன்றத்தின் ஒப்புதல் பெற்று அரசுக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டியுள்ளது.

மேற்காணும் விபரத்திற்கு மதுக்கரை நகராட்சியின் 2021–2022ம் ஆண்டின் திருத்திய வரவு செலவு திட்டத்திற்கும் 2022–2023ம் ஆண்டின் உத்தேச வரவு செலவுத் திட்டத்திற்கும் உரிய அறிக்கை மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

(ந.க.எண்.09/2022/அ1)

**<u>அலுவலக குறிப்பு</u>**

மன்றம் பார்வையிட்டு ஒப்புதல் வழங்கலாம்.

**<u>தீர்மானம் எண்.9</u>**

மன்றத்தில் ஒப்புதல் வழங்கப்பட்டது.

---

## மன்றப் பொருள் எண்.4

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.25896/2021/IT நாள்.10.03.2022ன்படி புதிதாக தரம் உயர்த்தப்பட்ட நகராட்சிகளில் 01.04.2022 முதல் UTIS software (urban Tree Info System Software) மென்பொருள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமென அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேற்காணும் விபரத்திற்கு 2022–2023ம் ஆண்டுக்கான வரவு செலவு அறிக்கையை நடைமுறைப்படுத்தப்பட வேண்டியுள்ளது. சொத்துவரி குடிநீர் கட்டணம் இதர வசூலுக்கு கணினி ரசீதுகள் பயன்படுத்தப்பட வேண்டியுள்ளது. மேலும் TNSWAN/VPN இணைப்புகள் தயார் நிலையில் வைக்கப்பட வேண்டியுள்ளது.

மேலும், மதுக்கரை நகராட்சியில் பொதுநிதி மட்டுமே தற்போது பராமரிக்கப்பட்டு வருகிறது. வருவாய் நிதிக்கு தனியாக கணக்கும் குடிநீர் வழங்கல் நிதிக்கு தனியான கணக்கும் நடைமுறைப்படுத்தப்பட வேண்டியுள்ளது. அதன் விபரத்திற்கு வருவாய் நிதிக்கு தனியான வங்கி கணக்கும் குடிநீர் வழங்கல் நிதிக்கு தனியான வங்கி கணக்கும் பராமரிக்கப்பட வேண்டியுள்ளது. மேலும் இந்நகராட்சிக்குச் சொந்தமான பள்ளிகள் ஏதும் இல்லாததால் ஆரம்ப கல்வி நிதி கணக்கு ஏதும் பராமரிக்கப்பட வேண்டியதில்லை.

மதுக்கரை பேரூராட்சியை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்ட நிலையில் இந்நகராட்சியில் 01.04.2022 முதல் வருவாய் நிதி கணக்கு தனியாகவும் குடிநீர் வழங்கல் நிதி கணக்கு தனியாகவும் பராமரிக்கலாம், இவற்றிக்கான வங்கி கணக்குகளும் தனித்தனியாக பராமரித்து நடைமுறைப்படுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

(ந.க.எண்.358/2022/அ1)

**<u>அலுவலக குறிப்பு</u>**

நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.25896/2021/IT நாள்.10.03.2022ன்படியான கடிதத்தில் அறிவுறுத்தியதன்படி தரம் உயர்த்தப்பட்ட மதுக்கரை நகராட்சியில் 01.04.2022 முதல் UTIS Software மென்பொருள் நடைமுறையை செயல்படுத்திட மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.10</u>**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

---

## மன்றப் பொருள் எண்.5

மதுக்கரை நகராட்சியின் நிர்வாகப் பணிகளுக்கு தேவையான காகிதங்கள், கணினி டோனர்கள், பதிவேடுகள், படிவங்கள், விண்ணப்பங்கள் கணினி ரசீதுகள் மற்றும் இதர எழுது பொருட்களை விலைக்கு வாங்கி இருப்புவைத்து அலுவல் பணிகள் மேற்கொள்ளப்படவேண்டியுள்ளது.

2022 – 23 ம் நிதி ஆண்டிற்கு தேவையான எழுது பொருட்கள் கொள்முதல் செய்வதற்கு ஏற்படும் உத்தேச செலவினம் ரூ. 20.00 லட்சம் ஆகும், இந்நகராட்சிக்கு தேவைப்படும் எழுது பொருட்களை அரசு கூட்டுறவு நிறுவனத்தின் மூலம் அங்கீகரிக்கப்பட்ட விலையில் கொள்முதல் செய்வதற்க்கும் அதற்காகும் உத்தேச செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்வதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

( ந.க. எண்.371/2022/அ1)

**<u>அலுவலக குறிப்பு</u>**

நிர்வாக நலன்கருதி தேவையான எழுதுபொருட்களை அரசு கூட்டுறவு நிறுவனத்திடமிருந்து கொள்முதல் செய்து கொள்ளவும் அதற்கான செலவினத்தை மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.11</u>**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

---

## மன்றப் பொருள் எண்.6

மதுக்கரை நகராட்சிக்குச் சொந்தமான குப்பைத் தொட்டிகள் அனைத்தும் மிகவும் பழுதான நிலையில் உள்ளது. இதனால் பொதுசுகாதாரக்கேடு ஏற்படுகிறது. எனவே, பொது சுகாதார நலன் கருதியும் நகராட்சியின் நிதி நிலையினை கருத்தில் கொண்டும் தற்போது பயன்பாட்டில் உள்ள 38 எண்ணிக்கையிலான குப்பை தொட்டிகளை பழுது நீக்கம் செய்து பயன்பாட்டிற்கு கொண்டு வரவேண்டியுள்ளது. இவற்றில் ஒரு குப்பைத்தொட்டியை பழுது நீக்கம் செய்ய ஏற்படும் செலவின மதிப்பீடு ரூ.25000/– வீதம் 38 குப்பைத்தொட்டிகளுக்கு ரூ.950000/– மொத்த செலவினம் ஆகும்.

மேற்கண்ட செலவினத்தை நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்வதற்கும், குப்பைத்தொட்டிகள் பழுது நீக்கப்பணியை திறந்த ஒப்பந்தப்புள்ளிகள் சட்டம் மற்றும் விதிகளின்படி மேற்கொள்ளவும் அதற்காகும் செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

(ந.க.எண்.353/2022/அ1)

<u>அலுவலக குறிப்பு</u>

பொது சுகாதார நலன் கருதி நகராட்சி குப்பைத்தொட்டிகள் பழுதாகியுள்ளதை பழுது நீக்கம் செய்யவும் அதற்கான உத்தேச செலவு ரூ.9.50 லட்சத்தை பொது நிதியிலிருந்து பட்டுவாடா செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

<u>தீர்மானம் எண்.12</u>

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

---

## மன்றப் பொருள் எண்.7

இந்நகராட்சி தெருவிளக்கு பராமரிப்பு பணியை கூடுதல் பணியாக பார்த்து வருபவரின் 18.03.2022ம் நாளிட்ட கடிதத்தில் தெரிவித்துள்ளபடி கீழ்காணும் இடங்களில் மின்மாற்றிகள் மாற்றி அமைத்ததால் தெருவிளக்குகள் எரிவது தடைபட்டு விட்டது.

| வ. எண். | தெருவிளக்குகளின் அமைவிடங்கள் | தெருவிளக்குகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | குரும்பபாளையம் ரோடு INTUC அருகில் | 18 |
| 2 | குரும்பபாளையம் ரோடு முத்துவிநாயகர் கோவில் அருகில் | 2 |
| 3 | இந்திரா நகர் | 7 |
| 4 | சுந்தராபுரம் ரோடு (செட்டிநாடு சிமெண்ட் கம்பெனி) | 6 |
| 5 | சுந்தராபுரம் ரோடு (கோவை பிளாஸ்டா) | 2 |
| 6 | அறிவொளி நகர் வேட்டைகாரசாமி கோவில் அருகில் | 4 |
| | **மொத்தம்** | 39 |

மேற்கண்ட இடங்களில் புதிதாக மின் இணைப்பு பெறுவதற்கும் ஏற்படும் உத்தேச செலவு ரூ.20000/– ஆகும். மேற்கண்ட இடங்களில் புதிய மின் இணைப்பு பெறுவதால் நகர் பகுதியில் 39 எண்ணிக்கையிலான தெருவிளக்குகள் எரிய வைத்து பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வரலாம். மேற்கண்ட விபரத்திற்கு தெருவிளக்குகளுக்கு மின்சார வாரியத்திற்கு செலுத்த வேண்டிய தொகை ரூ.20000/– நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

(ந.க.எண்.324/2022/அ1)

<u>அலுவலக குறிப்பு</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.13</u>**

மன்றத்தில் தீர்மானம் அனுமதிக்கப்பட்டது.

---

## மன்றப் பொருள் எண்.8

இந்நகராட்சியின் பயன்பாட்டில் உள்ள பணமதிப்புப் படிவங்களின் விலை விகிதம் ஏதும் நிர்ணயிக்கப்படவில்லை. இந்நிலை பேரூராட்சி காலத்திலிருந்து பல ஆண்டுகளாக இருந்து வருகிறது. இதனால் எழுது பொருட்களின் செலவினம் கூடுதலாக ஏற்படுகிறது. இச்செலவினத்தை ஈடுசெய்யும் வகையில் தற்போதுள்ள விலை விகிதத்தினை கீழ்க்காணும் விபரப்படி நிர்ணயிக்கலாம்.

| வ. எண். | படிவங்களின் விபரம் | நிர்ணயிக்கப்பட வேண்டிய விலை |
|---|---|---|
| 1 | பிறப்பு இறப்பு படிவம் | 10.00 |
| 2 | சொத்துவரி விதிப்பு படிவம் | 100.00 |
| 3 | சொத்துவரி பெயர்மாற்றம் படிவம் | 100.00 |
| 4 | குடிநீர் இணைப்பு படிவம் (வீடு) | 500.00 |
| 5 | குடிநீர் இணைப்பு படிவம் (வணிகம்) | 500.00 |
| 6 | குடிநீர் இணைப்பு பெயர்மாற்றம் | 100.00 |
| 7 | கட்டட அனுமதி விண்ணப்பம் | 100.00 |
| 8 | அச்சம் மற்றும் அருவருக்கத்தக்க விண்ணப்பம் | 100.00 |

மேற்காணும் விபரத்திற்கு பண மதிப்பிலான படிவங்களின் விலை விகிதத்தை 01.04.2022 முதல் நிர்ணயம் செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

(ந.க.எண்.98/2022/அ1)

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. இந்நகராட்சியின் நிதிநிலையை கருத்தில் கொண்டு எழுதுபொருட்களின் செலவினங்களை ஈடுசெய்யும் விகிதத்தில் ஏற்கனவே பல ஆண்டுகளாக இருந்து வரும் பணமதிப்புள்ள படிவங்களின் கட்டணங்களை பட்டியலில் காணும் விகிதத்தில் நிர்ணயித்து 01.04.2022 முதல் நடைமுறைப்படுத்தவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.14**

1. அனுமதிக்கப்பட்டது.
2. படிவங்களின் விபரத்தில் வரிசை எண்.1க்கு பிறப்பு இறப்பு படிவம் நிர்ணயிக்கப்பட வேண்டிய விலை ரூ.10/– பதிலாக இலவசமாக வழங்க அனுமதிக்கப்பட்டது.

---

## மன்றப் பொருள் எண்.9

தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையத்தின் சட்டப்பூர்வ ஆணை மற்றும் வழிகாட்டு நெறிமுறைகளின்படி மதுக்கரை நகராட்சிக்கு நகர்மன்ற உறுப்பினர்கள் 27 பேர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டது. இவர்களுக்கிடையேயான நகர்மன்றத் தலைவருக்கான மறைமுகத் தேர்தலும் நடத்தப்பட்டு மதுக்கரை நகராட்சி மன்றம் உருவாக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இந்நகராட்சியின் மன்றத்தலைவர் அன்றாட பொதுமக்களின் குறைகள் தீர்க்கும் அலுவர் பணியை மேற்கொள்ள வேண்டியுள்ளது. இந்நகராட்சி அலுவலகத்தில் பொதுமக்கள் எளிதில் நகர்மன்றத் தலைவரை சந்தித்து கோரிக்கைகளை நிறைவேற்றிக்கொள்ளும் பொருட்டு நகர்மன்றத் தலைவருக்கான அலுவல் அறை ஒன்று ஒதுக்கீடு செய்து தேவையான வசதிகள் மேற்கொள்ப்பட வேண்டியுள்ளது.

பொதுமக்களின் நலன் கருதி மதுக்கரை நகராட்சி அலுவலகத்தின் தரைத்தளத்தில் வடகிழக்கு மூலையில் உள்ள அறையை ஒதுக்கி இங்கு பொதுமக்கள் வந்துசெல்வதற்கு தேவையான வசதிகளுடன் மாற்றியமைத்துக்கொடுக்க வேண்டியுள்ளது. நகர்மன்றத்தலைவர் அறைக்கு வர்ணம் பூசுதல் மற்றும் உள்அலங்காரம் உள்ளிட்ட செலவுகளுக்கான உத்தேச மதிப்பீடு ரூ.200000/– ஆகும். இச்செலவினத்தை நகராட்சி பொதுநிதி (வருவாய் நிதி) யிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

(ந.க.எண்.08/2022/அ1)

**அலுவலக குறிப்பு**

பொதுமக்களின் வசதிக்காக நகர்மன்றத் தலைவர் அறைக்கு தேவையான வசதிகள் ஏற்படுத்திக்கொடுக்க ஆகும் செலவினம் ரூ.200000/–க்கு மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.15**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

---

## மன்றப் பொருள் எண்.10

1920ம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் அத்தியாயம் 6A, பகுதி IVன்படி பொது சுகாதாரமும் பாதுகாப்பும் வசதியும் (Public Health Safety and Convenience) பொதுமக்களுக்கு செய்து கொடுக்க வேண்டியுள்ளது. இந்நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவுக்கு தேவையான சுண்ணாம்புத்தூள், பிளிச்சிங்பவுடர், பினாயில், கிருமிநாசிகள் உள்ளிட்ட இதர தளவாட சாமான்களும் பொதுமக்களின் சுகாதார நலன்கருதி விலைக்கு வாங்கி பயன்பாட்டிற்காக தயார் நிலையில் வைக்க வேண்டியுள்ளது. தமிழ்நாடு திறந்தநிலை ஒப்பந்தப்புள்ளிகள் சட்டம் மற்றும் விதிகளுக்கு உட்பட்டு தேவையானவற்றை கொள்முதல் செய்வதற்கும் இதற்கான உத்தேச செலவினம் ரூ.20.00 லட்சத்தினை நகராட்சி (வருவாய் நிதி) பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

(ந.க.எண்.158/2022/அ1)

<u>அலுவலக குறிப்பு</u>

பொதுமக்களின் சுகாதார நலன் கருதி பொதுசுகாதார பராமரிப்பு செலவுகளை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

<u>தீர்மானம் எண்.16</u>

மன்றத் தீர்மானம் அனுமதிக்கப்பட்டது.

---

## மன்றப் பொருள் எண்.11

1920 ம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் அத்தியாயம் 7 பிரிவுகள் 125 முதல் 131 முடிய சட்டத்தால் வழிவகைகள் செய்யப்பட்டதன்படி பொது மக்களுக்கு தேவையான குடிநீர் சீரான வகையில் விநியோகிக்கப்பட வேண்டியுள்ளது வரும் 2022 – 23 ம் ஆண்டு 27 வார்டுகளிலும் சீரான குடிநீர் வழங்க தேவையான மின்மோட்டர்கள், GI மற்றும் PVC பைப்புகள் உள்ளிட்ட இதர குடிநீர் வழங்கல் உதிரிப்பாகங்களை விலைக்கு வாங்க வேண்டியுள்ளது இப்பொருட்களை தமிழ்நாடு திறந்தநிலை ஒப்பந்தப்புள்ளி சட்ட விதிகளின் படி மேற்கொள்ளப்படவேண்டியுள்ளது. இதற்காகும் உத்தேச செலவினம் ரூ. 25.00 லட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது.

இந்நகராட்சி 27 வார்டுகளிலும் பொது மக்களுக்கு தங்கு தடையின்றி சீரான குடிநீர் விநியோகம் செய்ய தேவையான குடிநீர் வழங்கல் உபகரணங்கள் விலைக்கு வாங்க ஏற்படும் உத்தேச செலவினை நகராட்சி குடிநீர் வழங்கல் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

( ந.க. எண்.307/2022/அ1)

**<u>அலுவலக குறிப்பு</u>**

பொதுமக்களுக்கு சீரான குடிநீர் வழங்கும் பொருட்டு தேவையான உபகரணங்களை (உதிரிபாகங்கள்) வாங்குவதற்கும் அதற்கான செலவினை மேற்கொள்ளவதற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.17</u>**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

---

## மன்றப் பொருள் எண்.12

1920 ம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் அத்தியாயம் 7 பிரிவு 136 ன் படி பொது தெருக்களில் விளக்கு போடுவதற்கான ஏற்பாடுகள் நகராட்சியால் செய்து கொடுக்கப்படவேண்டியுள்ளது.

இந்நகராட்சியின் 27 வார்டு பகுதிகளிலும் வசிக்கும் பொதுமக்களுக்கு தெருவிளக்குகள் வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளதில் அடிக்கடி ஏற்படும் பழுதுகளை சரி செய்யப்படவேண்டியுள்ளது. இப்பழுது நீக்கம் பராமரிப்பு பணிகளுக்கு தேவையான மின் விளக்குகள், வயர்கள் சுவிட்சுகள் உள்ளிட்ட இதர உதிரிப்பாகங்களை விலைக்கு வாங்க ரூ. 15.00 லட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. இவ்வுதிரிப்பாகங்களை தமிழ்நாடு திறந்த நிலை ஒப்பந்தப்புள்ளி சட்டம் மற்றும் விதிகளுக்கு உட்பட்டு விலைக்கு வங்கிப் பயன்படுத்தப்பட வேண்டியுள்ளது.

மேற்கண்ட செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்வதற்கும் நகரின் அனைத்துப் பகுதிகளிலும் குறைவில்லாத தெருமின் விளக்குகள் வசதிகள் ஏற்படுத்திக்கொடுப்பதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

( ந.க. எண்.20/2022/அ1)

**<u>அலுவலக குறிப்பு</u>**

பொதுமக்களின் நலன் கருதி தெருவிளக்குகள் பராமரிப்பு பணிக்கான செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.18</u>**

அனுமதிக்கப்பட்டது.

---

## மன்றப் பொருள் எண்.13

மதுக்கரை நகராட்சி அரிசிபாளையம், ஆரம்பசுகாதார நிலையம் வட்டார மருத்துவ அலுவலர் அவர்களின் கடிதம் நாள்.08.03.2022ன்படி மதுக்கரை நகராட்சியில் 04.03.2022 அன்று VBDC இணை இயக்குநர் அவர்களால் டெங்கு காய்ச்சல் மற்றும் டெங்கு தடுப்பு பணியை ஆய்வு செய்யப்பட்டதாகவும், ஒவ்வொரு வீட்டிற்கும் டெங்கு கொசுக்கள் இல்லாத வீடு மற்றும் டெங்கு வருடாந்திர காலண்டர் அமைத்து ஒவ்வொரு வீட்டிலும் ஒட்டும்படி அறிவுறுத்தப்பட்டதாகவும், ஒவ்வொரு வீடாகவும் மஸ்தூர் பணியாளர்களைக் கொண்டு டெங்க சுவரொட்டிகளை ஒட்டும்படி கேட்டுக்கொண்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்கள். மேற்கண்ட விபரத்திற்கு சுவரொட்டிகள் அச்சடித்துக்கொடுக்க கடந்த 10.03.2022ல் வரப்பெற்ற விலைப்புள்ளிகள் விபரம் வருமாறு.

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் | ஒன்றின் விலை விகிதம் (இரண்டுக்கும்) | மொத்த விலை விகிதம் இரண்டுக்கும் |
|---|---|---|---|
| 1 | கோவை ஆதி தொழுநோயாளிகள் மறுவாழ்வு நலச்சங்கம், கோயம்புத்தூர் | ரூ.16.00/– | ரூ.240000/– |
| 2 | முரளி ஆப்செட், கோயம்புத்தூர் | ரூ.18.20/– | ரூ.273000/– |
| 3 | ஆம்மன் பிரிண்டிங் பிரஸ் | ரூ.20.30/– | ரூ.304500/– |

மேற்கண்ட விபரத்திற்கான மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலை விகிதம் கொடுத்துள்ள திருவாளர் கோவை ஆதி தொழுநோயாளிகள் மறுவாழ்வு நலச்சங்கம், கோயம்புத்தூர் நிறுவனத்தாரின் விலை விகிதத்தினை ஏற்று வேலை உத்தரவு வழங்கி நகராட்சிக்கு தேவையான சுவரொட்டிகள் அச்சடித்து பெறுவதற்கும் அதற்காகும் செலவினம் ரூ.240000/–ஐ (ரூபாய் இரண்டு லட்சத்து நாற்பதாயிரம் மட்டும்) நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

(ந.க.எண்.337/2022/அ1)

<u>அலுவலக குறிப்பு</u>

பொதுசுகாதார நலன் கருதி நகராட்சிக்கு தேவையான டெங்கு நோய் தடுப்பு சுவரொட்டிகள் அச்சடித்து வாங்கியதற்கான நடவடிக்கையின் குறைந்த விலைப்புள்ளிதாரருக்கு பட்டுவாடா செய்தமைக்கு மன்றம் அனுமதிக்கலாம்.

<u>தீர்மானம் எண்.19</u>

மன்றத்தில் அனுமதிக்கப்பட்டது.

---

## மன்றப் பொருள் எண்.14

1920ம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் பிரிவு 118ன்படி நகராட்சிக்கு கேட்பு எழுப்பப்பட்டு வசூலிக்க முடியாத தொகைகளைத் தள்ளுபடி செய்திடும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளதன்படி, வகுத்துரைக்கப்படக்கூடிய வரையறைகளுக்கும் கட்டுப்பாட்டிற்கும் உட்பட்டு, நகராட்சிக்கு கொடுபட வேண்டியுள்ள வரி, கட்டணம் அல்லது தொகை எதுவாயினும் அதன்

தொடர்பான செலுத்ததக்க பணத்தொகை எதனையும் அத்தகைய வரியை கட்டணத்தை அல்லது பணத்தொகையை வசூலிக்க முடியாது என கருதினால் தள்ளுபடி செய்யலாம்.

இந்நகராட்சி குடிநீர் வழங்கல் பிரிவு பொறுப்பு பணியாளர் திரு. ப. ரவிச்சந்திரன் (துப்புரவு மேற்பார்வையாளர்) அவர்களின் 26.03.2022ம் நாளிட்ட கடிதத்தில் கீழ்காணும் எட்டு எண்ணிக்கையிலான குடிநீர் கட்டண கேட்புக்கள் தவறுதலாக எழுப்பப்பட்டுள்ளது எனவும் அதற்கான மொத்த கேட்பு நிலுவை ரூ.30240/—ஐ வசூலிக்க வாய்ப்பு இல்லையென்பதால் இவற்றை கேட்பிலிருந்து நீக்கம் செய்யலாம் என அறிக்கை செய்துள்ளார்.

குடிநீர் கட்டண கேட்பு தள்ளுபடி பட்டியல்.

| வ.எண். | பெயர் மற்றும் முகவரி | குடிநீர் கட்டணம் கேட்பு எண் | நிலுவை ரூபாய் |
|---|---|---|---|
| 1 | A. பாண்டியம்மாள் | 2864 | ரூ.3780/— |
| 2 | P.C. வேலாயுதம் | 295 | ரூ.3780/— |
| 3 | R. சிவராஜ் | 4449 | ரூ.3780/— |
| 4 | A. லட்சுமணன் | 3795 | ரூ.3780/— |
| 5 | அஸ்வினிதத் | 4870, 4889 | ரூ.3780/— |
| 6 | புளுமவுண்ட்டன் டவுன்சிப் பி லிட் | 4886 | ரூ.3780/— |
| 7 | லைலா TMS | 1075 | ரூ.3780/— |
| 8 | மருதாசலகவுண்டர் | 2411 | ரூ.3780/— |
| | | மொத்தம் | ரூ.30240/— |

மேற்கண்ட குடிநீர் கட்டண கேட்பு தொகையை வசூலிக்க மார்க்கம் இல்லையென்பதால் இவற்றின் மொத்த கேட்பு நிலுவை ரூ.30240/—ஐ கேட்பிலிருந்து நீக்கம் செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

(ந.க.எண்.416/2022/அ1)

**<u>அலுவலக குறிப்பு</u>**

1920ம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் பிரிவு 118ன்படி வசூலிக்க மார்க்கமில்லாத வரி மற்றும் கட்டணங்களை கேட்பிலிருந்து நீக்கம் செய்ய அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளதன்படி குடிநீர் கட்டணத்தின் தவறுதலாக எழுப்பப்பட்ட ஆறு எண்ணிக்கையிலான கேட்புகளுக்கு மொத்த கேட்பு நிலுவை ரூ.30240/—ஐ கேட்பிலிருந்து நீக்கம் செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.20</u>**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

---

**மன்றப் பொருள் எண்.15**

1920ம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் பிரிவு 118ன்படி நகராட்சிக்கு கேட்பு எழுப்பப்பட்டு வசூலிக்க முடியாத தொகைகளைத் தள்ளுபடி செய்திடும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளதன்படி, வகுத்துரைக்கப்படக்கூடிய வரையறைகளுக்கும் கட்டுப்பாட்டிற்கும் உட்பட்டு, நகராட்சிக்கு கொடுபட வேண்டியுள்ள வரி, கட்டணம் அல்லது தொகை எதுவாயினும் அதன் தொடர்பான செலுத்ததக்க பணத்தொகை எதனையும் அத்தகைய வரியை கட்டணத்தை அல்லது பணத்தொகையை வசூலிக்க முடியாது என கருதினால் தள்ளுபடி செய்யலாம்.

இந்நகராட்சி வருவாய் உதவியாளர் திருமதி. ந. ராஜேஸ்வரி அவர்களின் 21.03.2022ம் நாளிட்ட கடிதத்தில் கீழ்காணும் 21 எண்ணிக்கையிலான சொத்துவரி கட்டிடங்கள் இடிந்தநிலையிலும், மேலும் பழைய குடியிருப்புகளை இடித்துவிட்டு புதிய குடியிருப்புகள் கட்டப்பட்டு புதிய வரிவிதிப்புகள் செய்யப்பட்டுள்ளன. பழைய வரிவிதிப்புகள் நீக்கம் செய்ய விடுபட்டுள்ளதால் அதற்கான மொத்த கேட்பு நிலுவை ரூ.6422/—ஐ வசூலிக்க வாய்ப்பு இல்லையென்பதால் இவற்றை கேட்பிலிருந்து நீக்கம் செய்யலாம் என அறிக்கை செய்துள்ளார்.

சொத்துவரி கேட்பு தள்ளுபடி பட்டியல்.

| வ.எண். | பெயர் | சொத்துவரிவிதிப்பு கேட்பு எண் | நிலுவை ரூபாய் |
|---|---|---|---|
| 1 | மருதாசலக்கவுண்டர் | 5856 | 234 |
| 2 | செல்லம்மாள் | 6038 | 582 |
| 3 | சிவானந்தம் | 6043 | 230 |
| 4 | பேச்சிமுத்து | 6486 | 312 |
| 5 | ஆறுமுகம் | 6671 | 188 |
| 6 | ராஜன்மணி | 6788 | 268 |
| 7 | சி. ஆசைத்தம்பி | 6792 | 174 |
| 8 | மகேஸ்வரி பாலசுப்ரமணியம் | 6841 | 174 |
| 9 | சி. கீதா | 6964 | 120 |
| 10 | எஸ். எ. வடிவேலன் | 7032 | 174 |
| 11 | எஸ். எ. வடிவேலன் | 7033 | 174 |
| 12 | எஸ். எ. வடிவேலன் | 7034 | 174 |
| 13 | எஸ். எ. வடிவேலன் | 7035 | 174 |
| 14 | வி. வல்சலகுமாரி | 7092 | 174 |
| 15 | ஹாரூன் அம்ரசீத் மஜீத் | 12933 | 2198 |
| 16 | எம். ஆர். அசோகன் | 8333 | 132 |
| 17 | எம். ஆர். அசோகன் | 8334 | 132 |
| 18 | சரண்யா | 8769 | 298 |
| 19 | ராமசாமி | 8891 | 192 |
| 20 | பவித்ரா | 8911 | 90 |
| 21 | ஜா. சுசீலா | 9052 | 228 |
| | | மொத்தம் | ரூ.6422/— |

மேற்கண்ட சொத்துவரி கேட்பு தொகையை வசூலிக்க மார்க்கம் இல்லையென்பதால் இவற்றின் மொத்த கேட்பு நிலுவை ரூ.6422/—ஐ கேட்பிலிருந்து நீக்கம் செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

(ந.க.எண்.356/2022/அ1)

**அலுவலக குறிப்பு**

1920ம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் பிரிவு 118ன்படி வசூலிக்க மார்க்கமில்லாத வரி மற்றும் கட்டணங்களை கேட்பிலிருந்து நீக்கம் செய்ய அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளதன்படி இடிக்கப்பட்ட கட்டிடங்களுக்கான 21 எண்ணிக்கையிலான சொத்துவரி கேட்புகளுக்கு மொத்த கேட்பு நிலுவை ரூ.6422/—ஐ கேட்பிலிருந்து நீக்கம் செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.21**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

---

## மன்றப் பொருள் எண்.16

மதுக்கரை நராட்சிக்கு சொந்தமான மகேந்திரா டிராக்டர் வாகனம் எண் : TN37Q6934ன் மோட்டார் வாகனத்திற்கு 23.02.2022 நாள் முதல் தகுதிச்சான்று முடிவடைகிறது. இந்நகராட்சி வாகனத்திற்கு பழுது நீக்கம் செய்து கொடுப்பதுடன் வாகன தகுதிச் சான்று பெறுவதற்கான கட்டணங்கள் செலுத்துவதற்கும் சேர்த்து கடந்த 10.03.2022 ல் வரப்பெற்ற விலைப்புள்ளிகள் விபரம் வருமாறு

| வ.எண் | நிறுவனத்தரின் பெயர் | விலை விகிதம் |
|---|---|---|
| 1 | Thejaswini Auto<br>மதுக்கரை | ரூ. 1,16,254/— |
| 2 | Sri Saravana Auto Garage<br>கோயம்புத்தூர் | ரூ. 1,20,450/— |
| 3 | Sri Mookambigai Auto and Diesel Works கோயம்புத்தூர் | ரூ. 1,20,803/— |

மேற்கண்ட விபரத்திற்கான மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலை விகிதம் கொடுத்துள்ள திருவாளர் தேஜஸ்வினி ஆட்டோ, மதுக்கரை நிறுவனத்தாரின் விலை விகிதத்தினை ஏற்று வேலை உத்தரவு வழங்கி நகராட்சி வாகனத்திற்கு பழுது நீக்கி தகுதிச்சான்று பெறுவதற்கும் அதற்காகும் செலவினம் ரூ. 1,16,254/— ஐ (ரூபாய் ஒரு லட்சத்து பதினாண்காயிரத்து இருநூற்றி ஐம்பத்தி நான்கு மட்டும்) நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

( ந.க. எண்.329/2022/அ1)

**அலுவலக குறிப்பு**

பொது சுகாதார நலன் கருதி நகராட்சிக்குச் சொந்தமான டிராக்டர் மோட்டார் வாகனம் TN37Q6934 ஐ பழுது நீக்கம் செய்து தகுதிச் சான்று பெற்று குறைந்த விலைப்புள்ளிதாருக்கு பட்டுவாடா செய்தமைக்கு மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.22**

மன்றத்தில் அனுமதிக்கப்பட்டது

---

## மன்றப் பொருள் எண்.17

1920 ம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் அத்தியாயம் 9 பிரிவு 180 முதல் 188 முடிய சரத்துக்களின்படி தெருக்களில் ஆக்கிரமிப்புகளான ( Encroachment on streets) தெருக்களில் பொது போக்குவரத்திற்கு தடங்கள் ஏற்படுத்துவது, கதவுகள் வெளிப்புறமாகத் திறக்கப்படுவதை தடை செய்தல், கட்டடங்களை சில பிதுக்கங்களுடன் கட்டுதல், தெருவில் இடிந்த வீடுகளின் குப்பை கூடங்களை குவித்து வைத்தல், கால்வாயில் சுத்தம் செய்ய இயலாத நிலையில் கற்கள் மற்றும் சிலாப் மூலம் மூடிவைத்தல், தெருவில் போக்குவரத்திற்கு இடையூராக தின்னை மற்றும் கழிப்பாறைகள் கட்டுதல் போன்றவற்றால் பொது மக்கள் அவதிக்குள்ளாவதை சட்டப்படி தடுக்க வேண்டியுள்ளது.

எனவே, இந்நகராட்சி பகுதி 27 வார்டுகளிலும் பொது போக்குவரத்திற்கு இடையூராக உள்ள அனைத்து ஆக்கிரமிப்புகளையும் எவ்வித பாகுபாடும் இன்றி அகற்றிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

( ந.க. எண்.412/2022/அ1)

**அலுவலக குறிப்பு**

பொதுமக்களின் போக்குவரத்து வசதியை கருத்தில் கொண்டு பொதுவான ஆக்கிரமிப்புகளை சட்டத்திற்கு உட்பட்டு அகற்றிட மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.23**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

---

## மன்றப் பொருள் எண்.18

மதுக்கரை நகராட்சியானது 27 வார்டுகளாக பிரிக்கப்பட்டுள்ளது. தற்போது இந்நகர் பகுதியில் 36000க்கும் மேற்பட்டோர் வசித்து வருகிறார்கள். இப்பகுதி மக்களுக்கு பொதுசுகாதாரம் மேற்கொள்ள வேண்டியது மிக அவசியமானதாகும். தற்போது உள்ள நிரந்திர துப்புரவு பணியாளர்கள் 28 பேர்களும் சுய உதவிக்குழுக்கள் மூலம் 99 பணியாளர்களும் சேர்த்து மொத்தம்

127 எண்ணிக்கையிலான தூய்மை பணியாளர்கள் தற்போது பணிபுரிந்து வருகிறார்கள். மேற்கண்ட தூய்மை பணியாளர்களிடம் வார்டுக்கு 4 பணியாளர்கள் வீதம் பணியாற்றி வருவதால் பொதுமக்களுக்கு போதிய தூய்மை பணியை மேற்கொள்ள இயலவில்லை.

பொதுமக்களின் சுகாதார நலன் கருதி தற்போது ஒரு வார்டுக்கு 5 பேர்கள் வீதம் 27 வார்டுகளுக்கும் சேர்த்து மொத்தம் 135 நபர்களை தூய்மை பணிக்காக பயன்படுத்தலாம், எனவே, கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறைகள் ஆணை ந.க.எண்.6224/2021/இ3 நாள்.16.08.2021ன்படி துப்புரவு பணியாளருக்கான (Sanitary worker) ஒரு நாள் கூலி நிர்யிக்கும் அடிப்படையில் தூய்மை பணியாளர்களுக்கான செலவினம் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது.

தற்போது தேவைப்படும் 135 எண்ணிக்கையிலான தூய்மைபணியாளர்களில் நிரந்திரப்பணியாளர்கள் 28 பேர்கள் நீங்கலாக எஞ்சிய 107 தூய்மை பணியாளர்களை நகராட்சி மூலமாகவே தினக்கூலி அடிப்படையில் பயன்படுத்திக்கொள்வதற்கும், கோயம்புத்தூ மாவட்ட ஆட்சியரின் 2021–2022ம் ஆண்டு தினக்கூலி நிர்ணய அடிப்படையில் தூய்மை பணியை மேற்கொள்வதற்கும், அதற்காகும் செலவினம் ரூ.18297000/– நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்வதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**(ந.க.எண்.401/2022/அ1)**

**<u>அலுவலக குறிப்பு</u>**

பொதுமக்களின் சுகாதார நலன் கருதி தூய்மைபணி மேற்கொள்ள ஆட்கள் பற்றாக்குறையாக உள்ளதை ஈடு செய்யும் பொருட்டு மாவட்ட ஆட்சியரின் தினக்கூலி அடிப்படையில் தூய்மை பணியாளர்களை தினக்கூலி அடிப்படையில் பயன்படுத்திக் கொள்ளவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.182.00 லட்சத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>தீர்மானம் எண்.24</u>**

மாவட்ட ஆட்சியர் அவர்களின் தினக்கூலிக்குட்பட்டு தூய்மை பணி மேற்கொள்ளும் சுயஉதவி குழுக்கள் மூலம் ஒப்பந்தப்புள்ளிகள் பெற்று தூய்மை பணிகள் மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டது.

---

## மன்றப் பொருள் எண்.19

மதுக்கரை நகராட்சி அலுவல் பயன்பாட்டில் உள்ள கணினி உபகரணங்கள் (Computer Accesseries) வருடாந்திர பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது. தற்போது பயன்பாட்டில் உள்ள 7 எண்ணிக்கையிலான கம்ப்யூட்டர்கள் கணினி அச்சு இயந்திரங்கள் (Computer Printer) ஆகியவற்றை 01.04.2022 முதல் 31.03.2022 முடிய ஒரு வருடத்திற்கு வருடாந்திர பராமரிப்பு கட்டணம் செலுத்துவதற்கு கடந்த 22.03.2022ல் வரப்பெற்ற விலைப்புள்ளிகள் விபரம் வருமாறு.

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் | விலை விகிதம் |
|---|---|---|
| 1 | Syscon Systems<br>பொள்ளாச்சி | ரூ.199860/– |
| 2 | Sagari Electronics<br>பொள்ளாசசி | ரூ.223964/– |
| 3 | KSI Infotech<br>உடுமலைப்பேட்டை | ரூ.226560/– |

மேற்கண்ட விபரத்திற்கான மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலை விகிதம் கொடுத்துள்ள திருவாளர் Syscon Systems பொள்ளாச்சி விலை விகிதத்தினை ஏற்று வேலை உத்தரவு வழங்கி நகராட்சிக்கு தேவையான கணிணி உபகரணங்கள் பெறுவதற்கும் அதற்காகும் செலவினம் ரூ.199860/–ஐ (ரூபாய் ஒரு லட்சத்து தொண்ணூற்று ஒன்பதாயிரத்து எண்ணூற்று ஆறுபது மட்டும்) நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டடப்படுகிறது.

(ந.க.எண்.376/2022/அ1)

<u>அலுவலக குறிப்பு</u>

இந்நகராட்சியின் கணினி மயமாக்கப்பணியை துரிதப்படுத்தும் பொருட்டு நகராட்சியில் உள்ள அனைத்து கணினிப்பொறிகளையும் வருடாந்திர பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள வரப்பெற்ற குறைந்த விலைப்புள்ளிதாரர் திருவாளர் Syscon Systems, பொள்ளாச்சி நிறுவனத்தாரிடம் ஒப்பந்தம் செய்து கொள்வதற்கும் வேலை உத்திரவு வழங்கி அதற்கான செலவினம் மேற்கொள்வதற்கும் மன்றத்தில் அனுமதிக்கலாம்.

<u>**தீர்மானம் எண்.25**</u>

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

---

## மன்றப் பொருள் எண்.20

1920ம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் பிரிவு 118ன்படி நகராட்சிக்கு கேட்பு எழுப்பப்பட்டு வசூலிக்க முடியாத தொகைகளைத் தள்ளுபடி செய்திடும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளதன்படி, வகுத்துரைக்கப்படக்கூடிய வரையறைகளுக்கும் கட்டுப்பாட்டிற்கும் உட்பட்டு, நகராட்சிக்கு கொடுபட வேண்டியுள்ள வரி, கட்டணம் அல்லது தொகை எதுவாயினும் அதன் தொடர்பான செலுத்ததக்க பணத்தொகை எதனையும் அத்தகைய வரியை கட்டணத்தை அல்லது பணத்தொகையை வசூலிக்க முடியாது என கருதினால் தள்ளுபடி செய்யலாம்.

இந்நகராட்சி வருவாய் உதவியாளர் திருமதி. ஆ. லட்சுமி அவர்களின் 21.03.2022ம் நாளிட்ட கடிதத்தில் கீழ்காணும் 23 எண்ணிக்கையிலான சொத்துவரி கட்டிடங்கள் இடிந்தநிலையிலும், மேலும் பழைய குடியிருப்புகளை இடித்துவிட்டு புதிய குடியிருப்புகள் கட்டப்பட்டு புதிய வரிவிதிப்புகள் செய்யப்பட்டுள்ளன. பழைய வரிவிதிப்புகள் நீக்கம் செய்ய விடுபட்டுள்ளதால் அதற்கான மொத்த

கேட்பு நிலுவை ரூ.8674/—ஐ வசூலிக்க வாய்ப்பு இல்லையென்பதால் இவற்றை கேட்பிலிருந்து நீக்கம் செய்யலாம் என அறிக்கை செய்துள்ளார்.

சொத்துவரி கேட்பு தள்ளுபடி பட்டியல்.

| வ.எண். | பெயர் | சொத்துவரிவிதிப்பு கேட்பு எண் | நிலுவை ரூபாய் |
|---|---|---|---|
| 1 | ஷர்மிளாபானு | 1156 | 242 |
| 2 | சிவகாமி உன்னிகிருஷ்ணன் | 1212 | 186 |
| 3 | பொன்னம்மாள் | 1218 | 240 |
| 4 | சசிகலா | 1225 | 182 |
| 5 | சாகுல் அமீது | 1638 | 674 |
| 6 | சாகுல் அமீது | 1639 | 248 |
| 7 | பெ. சாந்தகுமார் | 2766 | 360 |
| 8 | பெ. சாந்தகுமார் | 2767 | 328 |
| 9 | உமாமகேஸ்வரி | 2852 | 174 |
| 10 | வீரநாயகி | 3330 | 620 |
| 11 | அல்போன்ஸ் | 3573 | 230 |
| 12 | சின்னசாமி | 3372 | 208 |
| 13 | வடிவேலன் | 3730 | 416 |
| 14 | அம்மாசை | 3743 | 492 |
| 15 | பி. ரங்கம்மாள் | 3987 | 174 |
| 16 | ஆறுச்சாமி | 3974 | 174 |
| 17 | மனோகரன் | 4532 | 442 |
| 18 | நஞ்சப்பன் | 4780 | 174 |
| 19 | கிருஷ்ணசாமி | 4711 | 710 |
| 20 | மகேந்திரகுமார் | 4875 | 1050 |
| 21 | கருப்பாத்தாள் | 4698 | 174 |
| 22 | பழனிசாமி | 11300 | 286 |
| 23 | மோகனசுந்தரம் | 11881 | 890 |
| | | மொத்தம் | ரூ.8674/— |

மேற்கண்ட குடிநீர் கட்டண கேட்பு தொகையை வசூலிக்க மார்க்கம் இல்லையென்பதால் இவற்றின் மொத்த கேட்பு நிலுவை ரூ.8674/—ஐ கேட்பிலிருந்து நீக்கம் செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

(ந.க.எண்.356/2022/அ1)

**அலுவலக குறிப்பு**

1920ம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் பிரிவு 118ன்படி வசூலிக்க மார்க்கமில்லாத வரி மற்றும் கட்டணங்களை கேட்பிலிருந்து நீக்கம் செய்ய அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளதன்படி இடிக்கப்பட்ட கட்டிடங்களுக்கான 23 எண்ணிக்கையிலான சொத்துவரி கேட்புகளுக்கு மொத்த கேட்பு நிலுவை ரூ.8674/–ஐ கேட்பிலிருந்து நீக்கம் செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.26**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

---

## மன்றப் பொருள் எண்.21

2021–2022ம் ஆண்டு நமக்கு நாமே திட்டத்தின் கீழ் மதுக்கரை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.4 அறவொளி நகர் விவேகானந்தா சதுக்கம் குமார் & பிரதர்ஸ் கம்பெனி முதல் ABS பிளாஸ்டிக் இன்டஸ்ட்ரியல்ஸ் வரை மண்சாலையை தார்சாலையாக மாற்றுதல் பணிக்கு ரூ.21.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட பணிக்கு மதிப்பீட்டில் மூன்றில் ஒரு பங்கு பொதுமக்கள் பங்களிப்பு ரூ.7.00 இலட்சம் ஆகும். இப்பணிக்கான மொத்த மதிப்பீட்டு தொகை ரூ.21.00 இலட்சத்தில் பொதுமக்கள் பங்களிப்பு தொகை ரூ.7.00 இலட்சம் போக பாக்கி தொகை ரூ.14.00 இலட்சத்தை நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களிடம் முழு மான்யமாக கோரி பெற்று மேற்கண்ட தார்சாலை பணியினை செய்ய மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

(ந.க.எண்.213/2022/அ1)

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. 2021–2022ம் ஆண்டு நமக்கு நாமே திட்ட மதிப்பீடு தொகை ரூ.21.00 இலட்சத்தில் பொதுமக்கள் பங்களிப்பு ரூ.7.00 இலட்சம் நீங்கலாக எஞ்சிய தொகை ரூ.14.00 இலட்சங்களை அரசின் முழு மான்யமாக பெற்று வார்டு எண்.4 அறவொளி நகர் விவேகானந்தா சதுக்கம் குமார் & பிரதர்ஸ் கம்பெனி முதல் ABS பிளாஸ்டிக் இன்டஸ்ட்ரியல்ஸ் வரை மண்சாலையாக உள்ளதை தார்சாலையாக மாற்றும் பணியினை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.27**

1. அனுமதிக்கப்பட்டது.
2. அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

இடம் : மதுக்கரை
நாள் : 25.03.2022

நகர் மன்றத்தலைவர்
மதுக்கரை நகராட்சி

---